# அன்பார்ந்த மாமா

மாமா எங்கள் மனதில் நிறைந்தீர்
தேமாங் கனியாய்த் திகட்டா திருந்தீர்
தாமாய்ப் பழகுந் தன்மை கொண்டீர்
ஏமாற் றிடவோ எம்மைப் பிரிந்தீர்? 1

அழகப் பாவில் ஆங்கிலங் கற்றீர்
கழகத் தோழர் கருத்தைக் கவர்ந்தீர்
அழகர் அந்தி வண்ண நிறத்தீர்
பழக நெஞ்சில் பதிந்து நின்றீர்! 2

காரைக் குடிக்கு நேரு வரவும்
சீரைப் பேசிச் சிந்தை கவர்ந்தீர்
பேரைப் பெற்றீர் புகழும் பெற்றீர்
ஊரார் போற்ற உவக்க வாழ்ந்தீர். 3

தீரச் செயல்கள் திறமாய்ச் செய்த
வீர மைந்தர் வியக்கத் தந்தீர்
பாரில் தமிழைப் பாது காக்கும்
போரில் அவர்தாம் பொருதக் கண்டீர்! 4

மதியே நிறைந்தார் அதிகம் போற்றும்
விதியாம் குறளின் விளக்கங் கண்டு
புதிய கருத்தைப் போற்றும் வகையில்
பதிய வைத்துப் பண்பில் உயர்ந்தீர்! 5

இல்லாள் தந்த இனிய அன்பில்
நல்லார் வழியில் நடந்து சென்றீர்
சொல்லால் எம்மைச் சொக்க வைத்தீர்
எல்லாம் இறையே என்றே வாழ்ந்தீர் 6

ஊக்கந் தந்து உயரச் செய்யும்
போக்கை எவரில் பொலியக் காண்போம்?
காக்குங் கரமாய் அன்பை என்றும்
தேக்கும் உறவைத் தேடிக் காண்போம்? 7

நீரைப் போல நெருங்கிப் பழகும்
யாரை உம்போல் யாமே காண்போம்?
ஆரை இனிமேல் அன்பால் அணைவோம்?
வேரை இழந்த மரமாய் வீழ்ந்தோம்! 8

காற்றாய் வந்து உம்மைக் கவர்ந்த
கூற்றின் கொடுமை கண்டு நாங்கள்
ஊற்றாய்ப் பெருகும் உணர்வில் ஊறி
ஆற்ற முடியா தரற்று கின்றோம்! 9

அழுந்தி நிற்போம் ஆறாத் துயரில்

விழுந்த எம்மை விரைந்து தூக்க
எழுந்து வருவீர் எம்முள் உயிராய்க்
கலந்து கனலாய் வாழ்ந்தி டுவீரே!

சிட்னி, அவுத்திரேலியா
ஆவணி 2020